**IN THE HON'BLE COURT OF THE DISTRICT MUNSIF, PAPPIREDDIPATTI.**

**OS.29/2021**

**Deposition of PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | துரைசாமி | Father's Name | : | பழனிசாமி |
| Village | : | ஈரோடு | Taluk | : | ஈரோடு |
| Age | : | 60 | Calling | : | |
| Religion | : | இந்து | | | |

வாதி மற்றும் பிரதிவாதியின் வழக்கறிஞர்கள் ஆஜர்.

**Solemnly affirmed/sworn by Tmt.K.Guvana, Assistant, in accordance with the provision Section.6 of Oaths act of 1969 on this 03rd day of December, 2025.**

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதியாவேன். நான் தற்போது ஈரோட்டில் வசித்து வருகிறேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதாகும். இதிலுள்ள சங்கதிகள் யாவும் எனக்கு தெரியும். மேற்படி பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்த பின்னர் தான் அதில் கையொப்பமிட்டேன். நான் தாக்கல் செய்துள்ள இந்த பிரமாண பத்திரத்தை எனது முதல் விசாரணை வாக்குமூலமாக ஏற்றுக்கொண்டு, இதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து, இவ்வழக்கில் நான் கோரியுள்ளபடி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**வா.சா. 1 ன் வேண்டுகோளின்படி பின்வரும் ஆவணங்கள் வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யப்படுகின்றன.**

| | | | | |
|---|---|---|---|---|
| **1** | **தாவா சொத்தினை வாதி கிரையம் பெற்ற கிரைய ஆவணம்** | **24.05.2019** | **சான்றிட்ட நகல்** | **வா.சா.ஆ.1** |
| **2** | **தாவா சொத்திற்கான பட்டா நகல்** | **06.02.2021** | **கணினி நகல்** | **வா.சா.ஆ.2** |

வாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் சில ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வா.சா.1–ன் முதல் விசாரணையானது அதன் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது,

SARANYA M

Digitally signed by SARANYA M
Date: 2025.12.03 16:10:57 +0530